




அமரர்

# பொன்னம்பலம் யோகரட்ணம்

அவர்களின்

# நினைவு மலர்

17.05.2016

உ
சிவமயம்



பிறப்பு 1932 . 01 . 06

இறப்பு 2016 . 04 . 19

எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

# பொன்னம்பலம் யோகரட்ணம்

அவர்களின்

## *திதி நிர்ணய வெண்பா*

ஆண்டு துர்முகி வருடம் சித்திரை நன்நாளில்
பூண்ட பூர்பபக்க திரயோதசி திதிதனில் நீண்ட புகழ்
கொண்ட எங்கள் பொன்னம்பலம் யோகவரெத்தினம்
விண்ணகம் சென்றடைந்த நாள்.

உ
சிவமயம்



அமரர்

# பொன்னம்பலம் யோகரட்ணம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17.05.2016

# சிவசிவ என்னச் சிவகதியாமே

தந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திர னுக்கரு ளீந்த இறைவனை
மந்திர ரூபனை நான்மற வேனே 1

ஒருவ னாலே உலக முதித்தது
ஒருவ னாலே உலகம் நிலைத்தது
ஒருவ னாலே உலகம் ஒடுங்கிடும்
ஒருவ னேயென் உயிர்த்துணை யாமே 2

ஒருவ னேயொரு மூவரு மானான்
ஒருவ னேயெல்லா வுயிர்களு மானான்
ஒருவ னேயெல்லா வுலகமு மானான்
ஒருவ னேயென்னை உய்யவைத் தானே 3

நகரத் துள்ளே நான்முக னானான்
மகரத் துள்ளே மாலவ னானான்
சிகரத் துள்ளே சிவனாய் நின்றான்
வகரத் துள்ளே யருள்வடி வானானே 4



# நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி 4

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி 5

பரிதிகாயில் வாடாது
பவனம்வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதெடி - கிளியே!
படைகள் மோதில் மாயாதெடி 6

அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி - கிளியே!
சீரார்நல்லூ ராசானெடி 7

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி - கிளியே!
விளங்குநல்லூர் வாசனெடி 8

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி - கிளியே!
கலங்காத வீரனெடி 9

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி 10



# சொல்லும் பொருளும்
# அற்றுச் சும்மா இருத்தடா

நல்லூர் ஆட்டக்காரா நீசெய்யடா ஓர்மாயம்
அல்லும் பகலுமற்று அதுவும் இதுவுமற்றுச்
சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருத்தடா
எல்லையில்லா இன்பம் என்னை விழுங்கவேண்டும்
சொல்லை அமுதமாக்கி உல்லாச மாய்த்திரிய
வில்லை முறியடித்து வெற்றிமுரசு கொட்டடா
கல்லை ஒத்தமனம் கரைய அருள்தாடா
இல்லையென்ற சொல்லை இல்லாமல் ஆக்கடா
முழுதும் உண்மையென்று முனிவன் சொன்னவாக்கு
எழுத முடியுமோ என்னைக்காப் பாயடா
பத்துவரியும் படிப்போர் கேட்போ ரெல்லாம்
முத்தர் ஆகுவார் முழுதும் உண்மையே



# நல்லூர் வீதியில்

இராகம் – பிலகரி

தாளம் – ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே

அநுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

சரணங்கள்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே (எந்நாளும்) 1

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச் சயமே (எந்நாளும்) 2

# சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக்கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே

அல்லலற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன்செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னுஞ் செல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
உல்லாச மாயெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கட்டிம் னத்தையாளச் சொல்லு சிவமே

# வறுமை பிணிக்கு மருந்து

இராகம் – சங்கராபரணம் தாளம் – ரூபகம்

வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே 1

வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்
வந்து குயில் கூவும்
மற்ற மாதரும் நாடக மாதரும்
வந்து மகிழ்ந்து வணங்கிடுவார் 2

வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தாடவர்கள்
சோதிப் பிரகாச வேலணைக் கொண்டாடித்
துதிப்பதைப் பார்த்திடுவோம் 3



# தேறித் தேறித் தெளிவதும் தன்னையே

ஓதி யோதி யுணர்வதுந் தன்னையே
நீதி பேசி நினைவதுந் தன்னையே
சாதி பேசிச் சலிப்பதுந் தன்னையே
ஆதி யாதியென் றாய்வதுந் தன்னையே 1

ஆறி யாறி அறிவதுந் தன்னையே
தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே
மாறி மாறி நினைவதுந் தன்னையே
கூறிக் கூறிக் குறிப்பதுந் தன்னையே 2

சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே
பவத்தை நீக்கிப் பணிவதுந் தன்னையே
தவத்தை யாற்றி யறிவதுந் தன்னையே
உவத்தல் காய்த லொழிப்பதுந் தன்னையே 3

வாதம் பேசி மதிப்பதுந் தன்னையே
காத மோடியுங் காண்பதுந் தன்னையே
பூத மைந்தனுட் போற்றலுந் தன்னையே
நாதம் விந்தென நவில்வதுந் தன்னையே 4

ஓடி யோடி உவப்பதுந் தன்னையே
தேடித் தேடித் தெளிவதுந் தன்னையே
நாடி நாடி நகைப்பதுந் தன்னையே
கூடிக் கூடிக் குறிப்பதுந் தன்னையே 5

# நடந்து போவோம்

இராகம் – பைரவி　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　தாளம் – ரூபகம்

பல்லவி

நல்லைப் பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்

அநுபல்லவி

அல்லற்றுயர் தருமூழ் மெல்ல
அகன்று போம் நீ வா　　　　　　　　　　　　　　　　　　　　　(நல்லை)

கல்லொடுத்திடு மனங்கணத்தில்
கரைந்து போம் விரைந்து வா　　　　　　　　　　　　　　　(நல்லை)

நில்லன் பொமுநினைந்து நினைந்து
நீநான் அறநின்று மகிழ்ந்து　　　　　　　　　　　　　　　(நல்லை)

சரணம்

செல்லப் பனைத்தினம் சேவிக்கும் நற்றவன்
செல்வச் சிவயோக நாதனுக் குற்றவன்
தில்லையம் பலம்சே விக்கும்பொற் பாதன்
தித்தித் தகுதகு கிடதோம்
தளங்கு தரிகிட கிடதோம்
தித்தித்தா திமிதிமி யென
நிர்த்தஞ் செய் மயி லேறிய
சத்திதான் தரு மைந்தன் வாழ்　　　　　　　　　　　　　　　(நல்லை)

# நல்லூரான் கிருபை வேண்டும்

நல்லூரான் கிருபை வேண்டும் - வேறென்ன வேண்டும்
நமைப்பிரி யானென நம்பிட வேண்டும் (நல்லூரான்)

எல்லா ரிடத்தும்அவன் இருப்பதைக் காணவேண்டும்
கொல்லாமை கள்ளாமை கோபத்தை நீக்கவேண்டும் (நல்லூரான்)

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
அல்லும் பகலுமவன் அடியிணையே தொழவேண்டும் (நல்லூரான்)

உல்லாசமாக உலகிற் றிரிய வேண்டும்
ஓம்சிவாய நமவென ஓதிக்கொள்ள வேண்டும் (நல்லூரான்)

பல்லோர்புகழ் நல்லூர்ச் செல்லப்பன் பாதத்தை
பக்தியாய்க் கும்பிட்டுப் பாடிட வேண்டும் (நல்லூரான்)

சொல்லும் யோகசுவாமி தோத்திரப் பாடலை
எல்லோரும் கேட்டு மகிழ்ந்திட வேண்டும் (நல்லூரான்)

# வருக முருக

**இராகம் - கீரவாணி** **தாளம் - திஸ்ரம்**

**பல்லவி**

வருக முருக பரம குருவே
வரதா குகனே

**அநுபல்லவி**

அரி மருகா தருணமிதே
தாரும் உமது சரணபாதம் (வருக)

**சரணம்**

பரவுவார்க் கருளுவாய் நீ
பரமசுகந் தரு பானு
சசியோகவதி தரு புதல்விதனை
மணந்த குமாரசுவாமி
மனமுவந்து மயிலேறிவா
சிவ யோகசுவாமி நீடு வாழ்க! வாழ்க! வையம் வாழ்க (வருக)

# எல்லாஞ்சிவமே

அப்பனும் அம்மையுஞ் சிவமே அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே என்னை யாண்டதுஞ் சிவமே

# மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீகாழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

# நற்சிந்தனை

ஒரு பொல்லாப்பு மில்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாமறியோம்
முழுவதும் உண்மை
ஓம் சத் சத் ஓம்


# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்




எமது குடும்பத்தலைவர் யோகரெத்தினம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு வேண்டிய உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. அமரரின் இறுதி நிகழ்வுகளின் போது நேரில் வந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமாகவும் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டும் மலர்வளையம் சாத்தியும், பத்திரிகைகள் போன்றவற்றில் பிரசுரித்தும் அஞ்சலி செலுத்திய எமது அன்பு உள்ளங்கள் யாவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். எமது அழைப்பை ஏற்று வந்து அந்தியேட்டி கிரியைகளிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இம் மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த மதிகலர்ஸ் அச்சகத்தினருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

# வம்சாவழி



பொன்னம்பலம் வாலாம்பிகை
சரோஜினிதேவி + ஸ்ரீ பத்மநாதன்
*யோகரட்ணம் + புவனேஸ்வரி
அடிகரட்ணம் + இராஜலக்ஷ்மி
யோகநாதன்
இந்திராணி + வாமதேவா
பத்மாதேவி + சச்சிதானந்தம்
லலிதாதேவி + சண்முகசுந்தரம்
நிலானி கோபிசங்கர்
அபிநயா
சுவாஸ்தி
மனஸ்வினி
நிரூஷன் பானு
அஸ்வினி


அனைத்துஞ் சிவன் செயல்.
அவனன்றி ஓர் அணுவும் அசையாது.
நாம் இழந்து போவதும் ஒன்றுமில்லை.
ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை.
நாம் இருந்தபடியே இருக்கின்றோம்.
-யோகர் சுவாமிகள்-
MATHI COLOURS